# வ ட் ட மே ஜை

✉ வாராவாரம் பெண்கள் பயன்படுத்தும் பட்டுப் புடவை பரிசு. ஓ... பாவம் சார் ஆண் வாசகர்கள்!
சென்னை, அப்பாஜி வாசுதேவன்

✉ 'தேன்கூடு' பகுதியில் வாசகர் அனுப்பிய ஜோக் 'குமிஸ்' என்பது ஒட்டகப் பாலில் எடுக்கப்பட்ட மோர் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் குமிஸ் என்பது குதிரைப் (கழுதைப்) பாலில் இருந்து தயாரிக்கப்படும் பானம் என்று ஆக்ஸ்போர்டு அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
சென்னை, கே.எஸ்.நாராயணன்

✉ அமிதாப்பச்சனின் வெற்றிப் படமான 'அக்னி'க்கு அட்டகாசமான விமர்சனம் எழுதி 'அமல் ஆலெர்ட்' கொடுத்து எனை பிரமிப்பூட்டினீர்கள்! கல்கி மட்டுமல்ல. ஏறக்குறைய எல்லா பத்திரிகைகளுமே அதைத்தான் 'ஆஹா!' என்று பாராட்டியுள்ளன. ஆனால், 'அட்டகாசமான சண்டை, 'ஸ்டைலான அடி' என்ற வார்த்தைகளுக்கு பாகம் ஆப்ரேஷன், அக்னி ஃபிலிமுக்கு ஆகிவிட்டதோ!
சென்னை, தெய்வசிகாமணி

✉ "இதுக்கு ஏத்துக்கொண்டா தூக்கிட்டுப் போற மாதிரி ஆயிடும்" என்று சுத்திய இதிவ்டோபரிடம் "சுவா தூக்கிட்டுப் போகாதப்பா பாடையிலே வச்சி தூக்கிட்டுப் போ" என்று கலைஞர் சொன்னதைக் கேட்டவுடன் திருவள்ளுவர் சிலை வைத்து உருப்பினர் உங்கள் மட்டுமல்ல. மனித நேயம் கொண்ட மனிதர்கள் எல்லோருமே கவலை கண்ணீர் வடிப்பர்.
சேலம், பானுமதி ஜெகதீஷ்

✉ ஆக்ரா உச்சி மாநாடு, மணமகள் இல்லாத திருமணம் போல் அபத்தமாக நடந்து முடிந்த அவலத்தை உணர்த்திய கார்ட்டூன் அக்கிரமானது.
அம்பத்தூர், த. சத்தியநாராயணன்

✉ சபதம் சிறுகதையினைப் படித்து முடித்தபோது எங்க வீட்டிலேயும் இது தானோ என நினைக்கும்படி செய்தது.
இராயபுரம், ஜோதி சங்கர்

✉ கவி குடியர் மார்க்கெட் என்ற கடலில் மூழ்கிவிடாமல். நல்ல செய்தி என்ற முத்தினைப் பொறுக்கி எடுத்தேன். 'காசு'க்காக ஆசிரியர் தொழில் பார்க்கும் ஒவ்வொருவரும் ரமணர் சொன்ன 'குரு' என்ற வார்த்தைக்கான பொருளை உணரும்படி சொன்னது மிகவும் அருமை.
திருச்சி, உஷா ராமச்சந்திரன்

✉ "படம் எடுக்கிறவர்களும் சரி, பார்க்கிறவர்களும் சரி என்னை ஆக்ஷன் ஹீரோவாகத்தான் பார்க்க விரும்புகிறார்கள் எனும்போது நான் என்ன செய்துவிட முடியும்!" என்று விஜயகாந்த் கேட்டிருக்கிறாரே பட எடுக்கிறவராக இவரே இருக்கும் போது முற்றிலும் வித்தியாசமான படத்தைத் தயாரிக்க இவரே முன் வந்திருக்கலாமே!
சென்னை, எல்.மாதவி முருகேசு



✉ 'சாதனைச் சருகம்' தொடரில்

# பாவம் சார்!

பற்றிய கட்டுரை படித்தேன். ஏ.கே. செட்டியார் போல ஒரு நல்லவரை நிர்வாகி கிடைத்தால் கேரளா மட்டுமல்ல, தென்னாட்டில் தங்க வயல் போன்றதை கடலில் கரைத்த பெருங்காயமாய் மாறியிருக்காது.
குட்டலாடம்பட்டி, கே. மூர்த்தி

✉ தற்கொலைகள் பலவித சூழ்நிலைகளுக்காகக் கோழைகளால் பயன்படுத்தப்படும் ஆயுதம். இதனை அறிய தூக்குச் சாதகமாக மாற நினைப்பது கோழைகளின் வேலையற்ற வேலை.
நாகை, அப்துல்லா அஹமது

"பதற்றப்பட எதுவுமில்லை. வாசப்படி தடுக்கினதிலே அறு கீழே விழுந்திருக்கா. புருவத்திலேதான் இலேசா சிராய்ப்பு. கண்ணுக்கு எதுவும் ஆகலே."

சிவப்ரியா ராம்சேகரை உற்றுப் பார்த்தாள். "இதெல்லாம் எனக்கு ஏற்கெனவே மாமி மூலமா தெரியும். சொல்லப்போனா உங்களுக்குமேகூட இதெல்லாம் இங்கே வாறதுக்கு முன்பே தெரியும்."

ராம்சேகர் சங்கடத்துடன் தலைகுனிந்தார். பிறகு "நான் ஏன் கவலைப்படறேன்னு உனக்குத் தெரியும்" என்றார்.

மாமிக்கு எதுவும் விளங்கவில்லை. "என்ன பூடிமந்திரமோ! சரி சரி. கத்திரிக்காய்ப் பொரித்துவச் [illegible] கடை [illegible] வந்துதானே ஆகணும். இருங்க, நான் போய் டீ கலந்துண்டு வரேன்."

அறு தூங்கிக் கொண்டிருந்தாள். வலது புருவத்தின் மேற்புறமாகச் சிறிய வெட்ட வடுவில் பிளாஸ்திரி ஒட்டப்பட்டிருந்தது. இலேசான டெட்டால் வாசனையை உணர முடிந்தது.

"அறுவுக்கு உண்மையை நீதான் சொல்லணும் அப்பா. தான் அவ [illegible]போட இருக்கா."

"எவன் [illegible], தன்னுடைய புலவிதாத்தின் [illegible] தெரிஞ்சுக்காம இருக்கா [illegible] [illegible]" [illegible] பேசதைத் தொடர்



முடியாமல் இரண்டு விஷயங்கள் நடந்தன. பிறந்துவந்த வாசனை, ரோமி இன்னும் சில கணங்களிலேயே சூடான ஏலக்காய்த் டீயுடன் வந்துவிடுவாள் என்பதை உணர்த்தியது. அனுவும் பாதித் தூக்கத்தில் திடீரென்று எழுந்துவிட்டாள். "அக்கா" என்றபடி எழுந்து வந்து ஷெப்ரியாவின் பக்கத்தில் நெருக்கமாக உட்கார்ந்து கொண்டாள்.

சொல்லிவிடுவதுதான் நல்லது. இந்தச் சிறுமிக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தால்கூட, சில விளக்கங்கள் பயன்படும்.

"அனு, நான் ஒன்று சொல்லப் போறேன். அதிலே பயப்பட எதுவுமே இல்லை." அனு விழிப்பாக கொண்டுதான் இருந்தாள். ஆனால் தெளிக்க வேண்டியது கமோடு வந்து சேர்ந்த ரோமியின் வாசகம் நுழைந்தன. ஜாக்கெட்டில் அதில் ஒரு கோப்பையை எடுத்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

'தான் விஷயத்தைச் சொல்லும்போது மகள் மற்றும் மனைவியின் பிரசன்னத்தை நாகரிகமாகத் தவிர்க்கிறாள்.' ஷெப்ரியாவுக்குத் தெளிவாகவே புரிந்தது.

"அனு, உனக்கு வலது கண் ரொம்ப பலவீனமா இருக்கு."

"இடது கண்தான் குருடு. இல்லையா அக்கா?" இப்படியொருத் தாக்குப் பதிலை எதிர்பார்க்காத ஷெப்ரியா திகைக்க "என்ன ப்ரியா இப்ப உளர்றா!" என்று கதறினாள் கற்பகம். மாமியின் குரல் உயர்வதை மிக அரிதாகத்தான் ஷெப்ரியா கேட்டிருக்கிறாள். அதிர்ச்சியில் குரலின் டெசிபல் இரு மடங்காகிவிட்டது இப்போது.

அனுவைவிட மாமிக்கு விளக்கமளிப்பதும், சமாதானப்படுத்துவதும்தான் மிக முக்கியம் என்று உணர்ந்தாள் ஷெப்ரியா.

"பிறந்ததிலிருந்தே அனுவுக்கு இடது கண்ணிலிருந்து பார்வையே போயிருக்கு மாமி. அனுவுடைய வலது கண்ணோட ரெண்டு கண்களின் வேலையையும் பார்த்து வருது. அதனால் தான் இடது கண்ணின் குறை வெளியே அவளுக்குத் தெரியாமப் போயிருக்கு. ஏன் அனு...

# மனம் மனமறிய ஆவல் 18



பது எத்தனையாவதோ ஒரு தொழில்! முதன்முதலில் டெய்லராக அறிமுகமானான். பலவித துணிகளைத் தனக்குத் தைக்கத் தெரியும் என்று சொல்லியபடி ஊரில் கடை திறந்தான். அவன் கடை திறந்த வைபவம் மிகவும் அமர்க்களமானது. அந்தச் சமயத்தில் சரவணன் அண்ட் கோ ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தார்கள். ப்ளஸ் டூ. வீரையன் சின்ன வயசில் வீட்டை விட்டு ஓடிப்போய்த் திரும்பி வந்து, கையில் சற்றே சில்லரையுடன் சிங்கப்பூர் கைலியுடன் ஊருக்குள் உலாத்தினான்.

அப்போதுதான் பம்பாயிலிருந்து வந்திருக்கிறான். "பம்பாயில் ஒரு மிகப் பெரிய டெய்லர். அவரிடம்தான் அமிதாப்பச்சனும், ரிஷிகபூரும் துணி தைப்பார்களாம். எந்த ரிஷிகபூர்? அட.. விவரம் பத்தலையே... நீங்க 'பாபி' படம் பாக்கலையா! முடியக்காதுல கர்லர் வச்சுகிட்டு டிம்பிள் கபாடியாவோட 'ஹம் தும்'னு பாடுவாரே அந்தாளு தான். அந்த ரிஷி கபூர் எல்லாம் பேன்ட் சட்டை தைக்கிற டெய்லர்தான் வீரையனுக்கும் டெய்லரிங் சொல்லிக் கொடுத்த குரு."

சரவணன் அண்ட் பார்ட்டி இதைக் கேட்டு புளகாங்கிதப் போனார்கள்.. வீரையன் மேலும் சொன்னான்.

"பம்பாய்ல ஏகப்பட்ட சம்பாத்தியம். செலவழிக்கத் தெரியாது. அப்புட்டுச் செலவழிச்ச கை சும்மாயிருக்குமா! வசமா ஒரு தொழில் பண்ணணுமே.. என்று சொல்லியபடியே கோவிந்தசாமியின் வீட்டை ஒட்டிய திண்ணை ரூம் ஐநூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து வாங்கி, டெய்லர் கடையாக மாற்றினான். 'டிப்டாப் டெய்லர்ஸ்'னு பேரு வைக்கிறதா, 'பாம்பே டெய்லரா?' என்று இரு நாட்கள் தீவிர தன்னிரவு யோசனைக்குப் பிறகு தொழில் கற்ற மண்ணை விட்டுத் தராமல் 'பாம்பே டெய்லர்ஸ்' என்றே பெயர் சூட்டினான். இவ்வளப் பட்டியும், பாம்பேயும் இவ்வாறு வீரையன் புண்ணியத்தால் ஒரு புள்ளியில் இணைந்தன.





'எனக்கென்ன இது இப்படி பெல்லாம் கிண்டலடிக்கிறாரே?' என்று அசந்து விட்டோம். 'இந்த வயதில் இருக்கும் நாளுமறையாய் எதிரே சொன்னாலும் போல கொடுக்க வேண்டும் என்று தோன்றுகிறதே' என்ற முறைக்குப் பற்றிய பேச்சைத் தான் சொல்கிறோம். பெயரை வேறு யாராக இருக்க முடியும்? என்றாத் பாபா சாஹேப் தாக்கரேவேதான்!

சிவசேனைக்காரர்களுக்கும் பேசக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? இரண்டு மணிக்குத் தொடங்கி, இரவு பதினொரு மணி வரை பேச பேச என்று பேசித் தீர்த்து, புதிய ரெக்கார்டையே ஏற்படுத்திவிட்டார் ப்ரமோத் நவால்கர். அசப்பில் மராத்தியைப் போல இருப்பார். இருமுகமாய் அவர் செய்ததை சிவசேனைக்கு இந்த இவர் செய்து கொண்டிருக்கிறார். 'புல் வேர்' தொண்டர்களைப் 'பிடில் அடிக்கும்' தொண்டர்களாக ஆக்குவதுதான் அது. எல்லோருக்கும் முன் ஒரு பாச வலை விரிப்பு. தொண்டர்களுக்கு ஒரு

உற்சாகக் குவிப்பு, உத்தரவு இணைப்பு. இதனாலேயே புடைபுடையார். விக்ரோலியிலிருந்து முலுண்ட் வரையிலான தொண்டர்கள், பாட்டுப் பாடாக வந்து இந்தப் புத்துணர்ச்சி டானிக்கைப் பருகி பலம் பெற்றுச் சென்றனர். 'எல்லோருக்கெல்லாம்

வயசாகிவிட்டது. எதிர்காலம் இளைஞர்களிடம் தான்' என்றவர், சின்ன சின்ன பிரச்னை எடுத்துக் கொண்டது. ம.. நவால்கர் குடிக்கத்தான்!

சிவசேனைக்காரர்கள் பேச்சில் கலைமாகனமாயிருக்கு என்ன? 'ஜார்ஜ் புஷ் தன் பூனைக் குட்டிக்கு எப்படி இந்தியா என்று பெயர் வைக்கலாம்! ஏதோ புலிக் குட்டிக்கு வைத்தாலும் போனால் போகிறது என்று விட்டிருக்கலாம்' என்று தாக்கரே கொதித்துக் கொண்டிருக்கையிலேயே, 'ஆனையில்'

இறங்கிவிட்டார்களே சாக்ஸேனாக்காரர்கள்! ஒரு கழுதையைப் பிடித்துக் கொண்டு வந்து, அதற்கு 'அமெரிக்கா' என்று பெயரிட்டு, பதிவு செய்துவிட்டார்களே! இந்த அமெரிக்கக் கழுதைக்குப் 'பாதுகாப்' கொண்டாடி இனிப்பு விநியோகித்தார்கள். இந்தக் கதை அரங்கேறியது முலுண்டிலுள்ள ஏதோ கீழ்.

டோ. வெளிப்புற இடத்தில் பேச மறுத்தாலும் சில சமயம் தகராறாகிவிடுகிறது. ஏதோ கூரிய

மும்பை மசாலா

டெலிவிஷனில் 'க்யூன் கி சாஸ்பி...'
சீரியலின் மாமியார்-ஜனை எடுத்துக்
கொள்ளுங்களேன். 'தக்ஷா பெண்'ணாக
வரும் சேதனி தலே, ஸீரியலில் படு
பாப்புலர். அவரை ஒரு பிரபல குஜராத்தி
நடிகையை 'இமிடேட்' பண்ணச் சொல்ல,
அவர் மறுக்க, ஒரே களேபரமாகி, அவர்
வெளியேறிவிட்டார். அந்த இடத்தை


• நவ்யா

இட்டு நிரப்ப,
இப்போது புதிதாக
ஒரு காரெக்டர்
ஜனியாவின் வீட்டில்.
தக்ஷா பெண்ணின்
சகோதரி, 'ரக்ஷா
பெண்'ணாக
பிரவேசிக்கிறார். புதிய
சகோதரியுடன் தொடர்
தொடரும்.

பழைய
சகோதரிகளின் தொடர்பு
விட்டுவிடாமல்
இருக்கத்தான், இருக்கவே இருக்கிறது
'ரக்ஷா பந்தன்.' இந்த முறை மார்க்கெட்டுக்கு
வந்திருக்கும் 'ராகி'கள் அசத்துகின்றன.
அட்டகாசமான சகோதரர்களுக்கென்றும்
பொன்னாலான ராகிகள். விலை என்ன
தெரியுமா? 36,500 ரூபாய்தான். என்ன
பேச்சு மூச்சற்றுப் போய்விட்டீர்களா?

இப்படித்தான் பேசவே வாய்
எழாமல் தத்தளிக்கின்றனர் மறைந்த
பூலான் தேவியுடன் தொடர்பு கொண்ட
சில முன்னையவர்கள். அவரின்
சுயசரிதையை எழுதிய
மாலா

# அதட்டல் பேச்சு மிரட்டல்!

சென்,
"என் சகோதரியை
இழந்துவிட்டேன். எனக்கே இவ்வளவு
பாதிப்பென்றால் அவரது அம்மாவுக்கும்
சகோதரனுக்கும் எப்படி இருக்கும்!
எப்பேர்ப்பட்ட வீராங்கனை அவர்!"
என்று புலம்புகிறார். அவரை படிக்காக
பேட்டி எடுத்த சேகர் கபூர், "எல்லோரும்
அவரைப் பார்த்து நடுங்கிக்
கொண்டிருக்கையில், அவர் என்னைப்
பார்த்து நடுங்குவதாக சொன்னது
அதிசயமாயிருந்தது. துன்புறுத்தப்பட்ட

ஒரு பெண், வேறு வழியின்றி, துப்பாக்கி
ஏந்திய கன்னிக் கதை அவருடையது.
ரூபமும் கன்னி மையாகிவிட்டது."
என்று அங்கலாய்க்கிறார். அவரை
'பாண்டிட் க்வீன்' ஆக்கிய சேகர் கபூர்.
செய்தி கேட்டதும், ஓர் அறையில்
தன்னைப் பூட்டிக் கொண்டுவிட்டார்.
அத்தனை வரைக். 'ஒரு குழந்தையின்
உள்ளம் படைத்த வெள்ளையான உள்ளம்
அவருக்கு. மறுபிறவி எடுத்தவரை
வாழவிடாது சிதைத்துவிட்டனரே' என்று
குமுறுகிறார்.

அழுகைப் பேச்சு 'இரங்கல்'
என்றால் அதட்டல் பேச்சு மிரட்டல்.
மிரட்டுவதை ஒரு கலையாகவே
கற்றிருக்கிறது அண்டர்வர்ல்ட். பிஸினஸ்
வட்டாரங்களில் செல் ஃபோன்
அடித்தாலே நடுங்குகிறார்கள். செல்லில்
மிரட்டுவது ஆனந்த் துபாய் தம்பா. 'துபோ
தாவூத்தின் கையாள்தான் மிரட்டுகிறார்,'
என நினைத்து இவர்கள் கப்பம்
அழுதுவிடுவார்கள். கடைசியில்
பார்த்தால் அது 'ஃபான்சி' என்ற லோகல்
குண்டர். துபாய் 'ஸிம்' கார்டை வாங்கி
வைத்துக் கொண்டு, விளையாட்டுகிறான்.
போலீஸ், இவனைக் கண்டு துவண்டார்கள்.
இவனிடம் ஒரு துப்பாக்கிகூட கிடையாது
என்று அவதிக் கொண்டிருக்கின்றனர்.

ஒப்பனையின் பேச்சு ஒரு விதத்தில்
நடுங்க வைக்கிறதென்றால், நிதிஷ்
பரத்வாஜின் (மஹாபாரத ஸீரியலின்
கிருஷ்ணர்) பேச்சுவேறு விதத்தில்
நடுக்கமெடுக்க வைக்கிறது. இவர்
மானசரோவர் யாத்திரை மேற்கொண்டு
திரும்புகையில், கைலாச பர்வதத்தில்,
ஓரிடத்தில், விடியலில், ஒரு 15 அடி
அகல நாகநாகரைப்

பார்த்திருக்கிறார். அதை அப்படியே படம்
பிடித்து, இப்போது வருவோர்
போவோருக்கெல்லாம், யாத்திரை குறித்து
விமெண்டரியுடன், வீடியோ போட்டுக்
காண்பிக்கிறார். பார்ப்பவர்கள்
உறைகிறார்கள். கேட்பவர்கள்
உருகுகிறார்கள் - பக்திப் பரவசத்தில்!

• ஜெயஸ்ரீராஜ்

**மேஷம் :**

அளவோடு நலம் தரும் வாரமாக இருந்தாலும் உங்கள் ஆற்றலும் புத்திசாலித்தனமும் அபாரமா வெளிப்படக் கூடிய காலமிது. ஜோட்டா ரக அரிசிக்கு 'லெவி' கிடையாதுன்னு சொல்லியிருக்காங்களே. அதுபோல, உங்களோட புதிய முயற்சிகளுக்கும் தடை ஏதும் வராது. கணவன் - மனைவி உறவு நிலை அன்பு கலந்து இருக்கும். புதன் ராசியோட பலத்தால, படிக்கிற பசங்களுக்கு நல்ல எதிர்காலம் 'பளிச்'னு தெரியும். கூடப் பிறந்தவங்களால ஏதேனும் பிரச்னை வரலாம்.

**ரிஷபம் :**

'குரு' மட்டுமே சிறப்பாக இருந்தாலே, குதூகலத்துக்குக் குறைவில்லைன்னுவாங்க. ஆனா பாருங்க உங்க விஷயத்துல சூரியன், புதன், சுக்ரன் மூணு பேருமே 'குரு' பகவானோட கை கோத்திருப்பதாலே, இது சிறப்பான வாரமா இருக்குற சான்ஸ் அதிகமிருக்கு. என்னங்க! உடம்பு நலம் திருப்தியாக இருக்கும். விஞ்ஞானம், சாஃப்ட்வேர், மருத்துவத் துறையைச் சேர்ந்தவங்களா இருந்தா ராஜீவ்காந்தி ஃபெலோஷிப் போல தனி மவுசு கிடைச்சிடும். குடும்பத்தில் மங்கள மேளம் பொங்கி வழிய நல்ல நேரம் பார்க்க வேண்டியிருக்கும்.

**மிதுனம் :**

இந்த வாரம் பிஃப்டி - பிஃப்டி வாரம்னு நீங்க சொல்லிடலாம். என்னா, நன்மையும், தீமையுமா கலந்துல்ல வருது! துணிச்சல், புத்திசாலித்தனம் சூப்பரா வொர்க் அவுட் ஆகும். புதிய சொத்துக்கள் வாங்குவதுக்குப் போட்ட பிளான் படி சக்ஸஸ் ஆகும். ஆனா ஸ்பெகுலேஷன் துறையில மட்டும் மறந்தும் காசைப் போட்டுடாதீங்க. பண முதலீடு பண்ணும்போது ரொம்ப கவனம் தேவை. பெரியவர்கள், சாதுக்கள் தரிசனம் அமைதி தரும்.

**கடகம் :**

அடேயப்பா! ரொம்ப நாளைக்கு அப்புறம் நீங்க எதிர்பார்த்த யோகமான வாரம் அமைஞ்சிருக்கு. வெளியுறவு அமைச்சகத்தின் கோப்புகளைக் கபளீகரம் செய்த 'சார்லஸ்' கம்ப்யூட்டர் வைரஸ் போல, உங்களையும் ஏதேதோ குழப்ப எண்ணங்கள் பிடிச்சிருந்தன. அது இப்போது விலகி, செழிப்பான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளது. இரும்பு, எஃகு, எனமெல் வகையறாக்கள் நல்ல லாபம் அள்ளித் தரும். தந்தையின் நலனில் அக்கறை தேவை. டாக்டர் வீட்டுக்கும் மருந்துக் கடைக்கும் ஏறி இறங்க வேண்டியிருக்கும். கவனம்.

**சிம்மம் :**

உங்க ராசிநாதனாகப் பட்ட திருவாளர் சூரியன் பகவான் 12ல இருப்பது அவ்வளவு விசேஷமான பலன் இல்லைதான். அதுக்காக மனம் சோர்ந்துடாதீங்க. குரு பலம் நல்ல கட்டாயமாக இருக்கிறதால சுபமாக்கலாம். மனை, நிலம், வீடு வாங்க இதுதான் நல்ல காலம். பிரயாணங்கள் சுபமாக இருக்கு. ட்ரை பண்ணுங்க. தடங்கல் கோயில் கடவுள். அபிஷேகத்துக்கு தர்மமங்கடத்துக்கு உருவாகிய கோலங்களும் ரசிகர்கள் மாதிரி, உங்க நெருங்கிய நண்பர்களாலும் சிறுசிறு பிரச்னைகள் வரும்.

**கன்னி :**

மேட்டூர் அணை நீர் மட்டம் 'விடுவிடு'ன்னு குறைஞ்ச மாதிரி, உங்க டென்ஷன், பண பிரச்னை எல்லாமே 'மடமட'ன்னு குறையும். மனசில நம்பிக்கையும் துணிவும் கூடும். எதிரிகள் 'ஏண்டா இவன்கூட மோதினோம்'னு நொந்து போவாங்க. கோர்ட்டு கேஸில தர்மதேவதை உங்கப் பக்கம்தான். அரசுப் பணியாளர்கள் சூரிய பலம் காரணமாக வெற்றித் திலகம் சூடுவார்கள். பெண்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடக் கூடாது. வாழ்க்கைத் துணை நலம் தேவை.



தனுஷ ரசிகர்களுக்கு கவிதை விழும் வெளிநாட்டுக்குப் போக சான்ஸ் இருக்கலாம்.

**நக்கலையா. நக்கல்!**

